Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
DVC No.50/2024 Date: 10.03.2026
Deposition of witness for prosecution: PW1-நீனுா

**சாட்சி ஆஜர் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் இளங்கலை சட்டம் பயின்றுள்ளேன். அதற்கு முன்பு M.E படித்துள்ளேன். திருமணத்தின்போது நான் B.E மட்டும் படித்திருந்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தான் என்னை M.E படிக்கவைத்தார் என்றால் சரியல்ல. என்னை எனது பெற்றோர் M.E படிக்கவைத்தார்கள். M.E படிக்கும்போது நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தேன் என்றால் சரியல்ல. M.E படிக்க வைத்தது எதிர்மனுதாரர் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை பிரிந்ததில் இருந்து எனது தாயருடன் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். திருமணச்செலவுகளை எதிர்மனுதாரர் தான் செய்தார் என்றால் சரியல்ல, நாங்கள் ரொக்கம் கொடுத்தோம். அவ்வாறு பணம் கொடுத்ததை மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கும், எதிர்மனுதாரருக்கு இடையேயான திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். எனது திருமணத்திற்கு எனது அப்பா வரவில்லை என்றால் சரிதான். தற்போது வரை எனது அம்மா House wife ஆக இருந்து வருகிறார் என்றால் சரிதான். திருமணச்செலவுகளை எனது அம்மா செய்தாரா என்றால் அம்மாவும், அம்மாவின் அப்பாவும் செய்தார்கள். திருமணத்தின் போது எனக்கு 50 பவுன் நகை அணிவிக்கப்பட்டதாக நான் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்ட வைபோகங்களில் நகை அளிக்கப்பட்டது. திருமணத்திற்கு பின்னிட்டு நகை அளிக்கப்பட்ட விபரங்களை மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அளிக்கப்பட்ட நகைகளுக்குரிய ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் எனது நகைகளை அடகு வைத்த விபரங்களை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 100 பவுன் அணிந்ததற்குரிய புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றாலும், மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் ரூ.8 லட்சம் கொடுத்ததற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ரூ.8 இலட்சம் பணம் கொடுத்த தேதி, இடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.8 இலட்சம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டதற்கு சிகிச்சை பெற்றேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் 05.10.2020ம் தேதி என்னை வீட்டை விட்டு விரட்டியது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் புகார் கொடுத்தேன். நான் தற்போது, இளம் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். 2 குழந்தைகளின் பிறப்பிற்கும் பிரசவ செலவுகளை எதிர்மனுதாரர் செய்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு வேலூர் சி.எம்.சி மருத்துமனையில் சிகிச்சை அளித்தார் என்றால் சரியல்ல. தான் குழந்தைகளை சரிவர பராமரிக்காத காரணத்தால் தான் குழந்தைகளுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது

தாயாரின் கர்ப்பபை அறுவை சிகிச்சை செலவுகளை எதிர்மனுதாரர் செய்தார் என்றால் சரியல்ல. எனது மனுவின் பத்தி 6ல் எதிர்மனுதாரருக்கு மதுபழக்கம் மற்றும் வேறு பெண்களின் தொடர்ப்பு உள்ளது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இது குறித்த ஆணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை என்றால் சரியல்ல. 04.12.2020ம் தேதியிட்ட நான் அனுப்பிய அறிவிப்பிற்கு பின்னர் நானும், எதிர்மனுதாரரும் குழந்தையின் நலன் கருதி நல்ல முறையில் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் கொடுமை தான் செய்தார். எதிர்மனுதாரரின் அப்பா இறப்பிற்கு நான் சென்றேன். எனது மாமனாருக்கு செய்ய வேண்டிய இறுதி சடங்குகளை மறுநாள் வரை இருந்து செய்தேனா என்றால் மறுநாள் என்னை அழைக்கவில்லை. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பமாக உள்ளார் என்றாலும், நான் அவருடன் சேர்ந்து வாழ விருப்பமாக உள்ளேனா என்றால் இல்லை. எனது அம்மாவின் துர்போதனையின் அடிப்படையில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதை தவிர்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. சின்னமனூர் அண்ணா நடுநிலைப்பள்ளியில் முதல் குழந்தை 6ம் வகுப்பும், இரண்டாம் குழந்தை 1ம் வகுப்பும் படித்து வருகிறார்கள். குழந்தைகளை பார்க்க எதிர்மனுதாரரை நான் அனுமதித்ததில்லை என்றால் எதிர்மனுதாரர் வரவே இல்லை. எதிர்மனுதாரர் குழந்தை பார்க்க சென்றபோது, தகராறு செய்து, அதன் மீது காவல் நிலையத்தில் புகார் செய்தேன் என்றால் குழந்தைகளை பார்க்க அவர் வரவில்லை, வழக்கை வாபஸ் பெற வற்புறுத்தியதால் புகார் அளித்தேன். வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உத்தமபாளையம் வட்ட சட்ட பணிகள் குழுவில் எதிர்மனுதாரர் குழந்தைகளை பார்க்க வரக்கூடாது என மனு அளித்தேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் குழந்தைகளை பார்க்கும் உரிமையை எதிர்மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார்பு நீதிமன்றத்தில் இடைகால ஜீவனாம்சம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். உரிய ஆவணங்கள் இன்றி பொய்யான காரணங்களை கூறி நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/ P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.